

# இடம் பொருள் கலைஞர்

95

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் புகுமுகக் கல்வி இலவசம்!



# புகுமுகக் கல்வி இலவசம்!

## கலைஞர் நிகழ்த்திய கல்விப் புரட்சி

சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் களைய விளிம்புநிலை மக்களுக்கும் கல்வி சென்று சேர்ந்திட வேண்டும் என்பதே திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை. 1952–ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த ராஜாஜி, தந்தையின் குலத்தொழிலை மாணவர்கள் பகுதிநேரமாக செய்யவேண்டும் என்று ‘குலக்கல்வித்’ திட்டத்தை 1953 – 1954 கல்வியாண்டில் நடைமுறைப்படுத்த உத்தரவு பிறப்பித்தார்.

குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து, திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையான போராட்டங்களைக் கையில் எடுத்தன. அதன் தொடர்ச்சியாக, இராஜ கோபாலாச்சாரியார் முதலமைச்சர் பதவியில் இருந்து விலகி, பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்றார். மூடிய பள்ளிகளையும் திறந்து, குலக்கல்வித் திட்டத்தையும் ரத்து செய்தார்.

### அண்ணாவின் கனவு

1967–ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கல்வி சென்று சேர்ந்திட வேண்டும் என்ற நோக்கில், முதற்கட்டமாக வருமான வரம்பின் அடிப்படையில் புகுமுகக் கல்வி வரை ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி என ஆணையிட்டார்.

1969–ஆம் ஆண்டு அண்ணாவின் மறைவிற்குப் பின்பு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், அண்ணாவின் கனவை நிறைவேற்றும் நோக்கில் சாதி, இன வேறுபாடு இல்லாமல் வருமான வரம்பு ஏதும் இல்லாமல் அனைத்துத் தரப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் புகுமுக வகுப்புக் கல்வியை இலவசமாக வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, இந்திய அளவிலான சாதனையைத் தொடக்கக் கல்வியில் நிகழ்த்தினார்.

### கலைஞருக்குக் காமராசர் பாராட்டு

அனைவருக்கும் புகுமுகக் கல்வி இலவசம் என்று முதலமைச்சர் கலைஞர் ஆணை பிறப்பித்ததை அறிந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த நெ.து. சுந்தரவடிவேலு அவர்களிடம் “சாதி, வருமானம் ஆகிய அடிப்படைகளைப் பாராமல் எல்லோருக்கும் புகுமுகக் கல்வி இலவசம் என்று அரசு ஆணையிட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். கலைஞர்தான் இந்தத் துணிவான முடிவைப் பிறப்பித்திருக்க முடியும், முற்போக்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார். அதைப்பற்றி நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று அவரைப் பார்த்து என் சார்பில் சொல்லுங்கள்” என்று கூறியிருக்கிறார். அதை முதலமைச்சர் கலைஞரிடத்தில், தான் தெரிவித்ததைத் தன்னுடைய ‘நினைவலைகள்’ நூலில் நெ.து. சுந்தரவடிவேலு பதிவு செய்துள்ளார்.



### அதிகரித்த பள்ளிகளின் எண்ணிக்கை

இலவசமாக புகுமுகக் கல்வியை வழங்கும் திட்டத்தை கலைஞர் நடைமுறைப்படுத்தத் தொடங்கியவுடன் ஏழை-எளியவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பத் தொடங்கினார். பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிக்கத் தொடங்கியது. மாணவர்களுக்குத் தரமான கல்வியைத் தந்திட வேண்டும் என்பதற்காக, புதிய பள்ளிகளையும் கலைஞர் தலைமையிலான அரசு உருவாக்கியது.

1969 -ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்தன. 1975–ஆம் ஆண்டு 32 ஆயிரத்து 565–ஆக பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. இப்பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கையும் ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 766 ஆக அதிகரித்தது.

தொடக்கப் பள்ளியில் படித்துவிட்டு வரும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் எளிமையாகச் சேருவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. 1969–ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 513 ஆக இருந்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை 1975–ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 882 ஆக அதிகரிக்கச் செய்தார் கலைஞர். உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் 54 ஆயிரத்து 857 இல் இருந்து 69 ஆயிரத்து 454 ஆக உயர்த்தினார்.

> கலைஞர்தான் இந்தத் துணிவான முடிவைப் பிறப்பித்திருக்க முடியும், முற்போக்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்.

### கூடுதல் நிதி

1967–ஆம் ஆண்டுக்கு முன்பு கல்விக்கு என ஆண்டுக்கு 44 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. கலைஞரின் ஆட்சிக் காலத்தில் கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டது. குறிப்பாக, 1975–ஆம் ஆண்டு 118 கோடி ரூபாயாக உயர்த்தி நிதி ஒதுக்கப்பட்டது. கிராமப்புறங்களில் புதிதாகத் தொடங்கப்பட்ட அறிவியல் ஆய்வுக்கூட வசதிகள் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அந்த ஊர்திகள் அறிவியல் ஆசிரியர்கள் மற்றும் ஆய்வகக் கருவிகளுடன், ஆய்வகம் இல்லாத பள்ளிகளுக்குச் சென்று அறிவியல் பாடங்களைக் கற்பித்தன. இப்படி, கற்பித்தலிலும் புதுமைகள் செய்தார் கலைஞர்.

### புதிய பாடத்திட்டம்

1974–ஆம் ஆண்டு முதல் தொடக்கப் பள்ளிகளில் நூலக வசதியை ஏற்படுத்தவும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. மாணவர்களின் அறிவு வளம், ஆராயும் திறன், சிந்தனைத் தெளிவு, செயலாற்றும் திறமை ஆகியவற்றை வளர்க்கத் திட்டமிடப்பட்டன. வல்லுநர்கள் குழுவைக் கொண்டு புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களின் தரம் உயர்த்தப்பட்டது.

இந்திய வரலாற்றில் புரட்சிகரமான மாற்றமாக உடற்கல்விப் பாடத்தையும் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கி, அரசாணையை வெளியிட்டது கலைஞர் தலைமையிலான அரசு. பெரும் வரவேற்பைப் பெற்ற இத்திட்டத்தின் வழியாக, 1966–ஆம் ஆண்டு 45.11 இலட்சமாக இருந்த மாணவர் சேர்க்கை, 1974–ஆம் ஆண்டில் 55.60 இலட்சமாக உயர்ந்தது. அன்று கலைஞர் தொடங்கிவைத்த கல்வித் துறைச் சீர்திருத்தங்கள்தான், இன்று இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில், முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகக் காரணமாக அமைந்தது என்றால் மிகையல்ல.

2000–ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய அரசு 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், இடைநிற்றலைத் தவிர்த்தல், கல்வியைப் பெறுவதில் இடைவெளி ஏற்படுத்தும் பாலினப் பாகுபாடு மற்றும் சமூகப் பிரிவினைகளை நீக்கி, குழந்தைகளின் கற்றலை உறுதி செய்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு ‘அனைவருக்கும் கல்வி’ இயக்கத்தைத் தொடங்கியது. ஆனால், அதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி கிடைப்பதற்கான வாய்ப்புகளை, ‘புகுமுகக் கல்வி எல்லோருக்கும் இலவசம்’ என்ற திட்டத்தின் வழியாக நடத்திக் காட்டினார் கலைஞர். அந்தத் தொலைநோக்குச் சிந்தனை இன்னும் நூறு ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டை வழிநடத்தும்!

**...வலம் வருவோம்**

## சாஃப்ட்வேர் துறையில் சாதிக்கும் கோவை!

கோவை என்றால் பருத்தி, ஜவுளி, மோட்டார்தான் முதன்மை அடையாளங்கள். ஆனால், அடுத்த 10 ஆண்டுகளில் இந்த அடையாளங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, முன்னுக்கு வர ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது, தகவல் தொழில்நுட்பத் துறை. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் கோவையில் 50 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2020–ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோவையில் இருந்த புத்தாக்கத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை வெறும் 271. ஆனால், இன்றோ 1,350ஆக அதிகரித்துள்ளன. இதில் பெரும்பாலான புத்தாக்க நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும அதனைச் சார்ந்து செயல்படுபவை.

சென்னைக்கு வெளியே மென்பொருள் தொழில்வளங்கள் பெருக ‘திராவிட மாடல்’ அரசு எடுக்கும் முயற்சிகளுக்குக் கிடைத்திருக்கும் பலனாகவே இது உள்ளது. குறிப்பாக, கோவையில் 2.94 இலட்சம் சதுர அடியில், 158.32 கோடி ரூபாயில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவைத் தமிழ்நாடு முதலமைச்சர், நவம்பர் 5–ம் தேதி திறந்துவைத்தார். இப்போதே இரண்டு நிறுவனங்களுக்கு அதில் இடம் ஒதுக்கப்பட்டுவிட்டது. மேலும், பல நிறுவனங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.

இதுதவிர, ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் மேலும் 2 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை உருவாக்க, ‘எல்காட் நிறுவனம்’ திட்டமிட்டுள்ளது. இதனால், 35 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் சில தனியார் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும் விரிவாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதனால், அடுத்த 10 ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பத் துறையில், பிரமாண்ட வளர்ச்சியைக் காண காத்திருக்கிறது கோவை.

## :.ப்ளாஷ்பேக்



### 85 வயதிலும் இயக்கமே மூச்சு!



எம்.ரோச்

கழகத்தின் முன்னோடி, ‘குறளகம்’ ராஜு அவர்களின் மகன் திருமணம், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் அவர்களின் தலைமையில், சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றது. மணவிழா நிகழ்ச்சியில் நடிகர் திலகம் அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்தினார். அப்போது ராதாபுரம் ஒன்றியப் பொறுப்பில் இருந்த என்னைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டுதான் தலைவர் மணவிழாவை நடத்தி வைத்தார். 15 வயதில் தொடங்கிய கழகப் பற்று, இன்று 85 வயதிலும் அதே ஊக்கத்துடன் என்னை இயக்கிக் கொண்டிருக்கிறது.

**– எம்.ரோச், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர், ராதாபுரம், இலக்கிய அணித் துணைத் தலைவர், நெல்லை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘வார்தா திட்டம்’ ஒழிய வேண்டும்!


1941-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற. ‘கரூர் வட்டார நீதிக்கட்சி மாநாடு’ குறிப்பிடத்தக்க ஒன்று. ரயில்வே உணவு விடுதிகளில் சாதி வேறுபாட்டை ஒழித்ததற்குப் பின்னர் நடைபெற்ற மாநாடு இது. அப்போது பள்ளிகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட ‘வார்தா’ கல்வி முறையில், ‘தக்ளி’யில் நூல் நூற்பது உள்ளிட்ட பாடத்திட்டங்களை நீக்க வேண்டும்’ என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டுச் சொற்பொழிவுகளுக்காக ஒலிபெருக்கி வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

666

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131